# முக்காலம் நமதென்று முரசுகள் முழங்கட்டும்! எக்காளம் கேட்டு இமயமே அதிரட்டும்!




டாக்டர்
**எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.**
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்




**க**னிமப் பொருள் விளையும்
கவின்மிகு மாவட்டம்
முக்கனியில் முதற்கனியாம்
மாங்கனி
காய்த்துக் குலுங்கும்
கனிவான மாவட்டம்

கோட்பாட்டு வேங்கைகளால்
கொள்கைக் கோளரிகளால்
குலுங்கப் போகிறது
வரும் 21 ஆம் தேதி!

கம்பீரம் மிகுந்த
கழகக் காளைகளின்
கனல் முழக்க
காந்த அலைகளின்
கொதிப்பில்,
தங்கக் குழம்பாகத்
தகிக்கப் போகிறது..
சேலம்!
திகைக்கப் போகிறது
ஞாலம்!

இருட்டைக் கிழித்து
இதயங்கள் தோறும்
வெளிச்சக் கதிர்களை
விதைக்கவே பிறந்த
ஒரு
விஞ்ஞான இயக்கத்தின்
வீரியத் தலைமுறை,
கொடிகட்டிக் கொண்டு
குவியப் போகிறது..
பெத்தநாயக்கன் பாளையத்தில்!

காவியக் களங்கண்ட
கலைஞரெனும் பெருந்தகை
வரைந்து மகிழ்ந்த
உயிரோவியமாம் நம்
உத்தமத் தலைவர்,
தன்மானச் சிகரத்தின்
தளபதியார் அவர்களின்
அன்பான அழைப்பில்
தழைக்கப் போகிறது
தத்துவங்களின் மாநாடு!

குணங்களின் களஞ்சியம்
கொள்கைகளின் அரண்மனை
பகுத்தறிவுப் பாசறை
பண்பாட்டின் ஆலயம்
திராவிடத் திரவியம்
தீந்தமிழ்ப் பாவியம்
என்னும்

தகவுரைகள் அனைத்துக்கும்
தக்கவராய் விளங்கும் நம்
தளபதியார் அவர்களின்
புகழ் மகுடத்தில்
புது வைரம் பதிக்கும்
புதுயுகம் படைக்கும்
பொற்கால மாநாடு இது.

சித்தாந்தக் குகையில்
சீறி நிற்கும்.. ஒரு
சிங்கக் குருளையாய்
சிலிர்த்து விளையாடும்
உதயநிதி என்னும்
உற்சாக மித்திரன்
உழைப்பின் புத்திரன்
ஆற்றலை வெளிப்படுத்தப்
போகும்
அரசியல் மாநாடு இது!

மாண்புமிகு நம் தலைவர்
வாய்மலர்ந்தாற் போல,
‘கடல் இல்லாச் சேலத்தில்
கறுப்பு சிவப்புக் கடல்
காணீர்’ என்று
இந்தியத் திருநாடே
இறும்பூது எய்தத்தான் போகிறது!

‘மன்னவரும் இவரோ!
மாநிலத்தின் அரணாகும்
சின்னவரும் இவரோ!’
என்று
செப்பமுடைய
செந்தமிழ் வாணர்கள் அனைவரும்
ஒப்பரிய மக்கள் வெள்ளத்தின்
உள்ளிருந்து
ஓங்காரக் குரலெழுப்பி
உரைக்கத்தான் போகிறார்கள்.

இந்தத் தரைக்கு
இத்தனை
தலைகளா?
இவை
கறுப்பாய் இருக்கும்
முடிமுளைத்த மலைகளா?
என்று
மலைக்கப் போகிறது
மாநிலம்!

விதை நெல்லாய் இருக்கும்
வீரர்களே இவரென்றால்
கழகம் என்னும்
கழனியில் விளைந்திருக்கும்
தொண்டர்கள் எத்தனை பேர்
என்று
துவண்டுவிழப் போகின்றன
துக்கடாக் கட்சிகள்!

வாய்சுழற்றும் வல்லமையைவிட
வாள்சுழற்றும் வல்லமை
பெரிதென்று
காட்டிய தமிழ்க் குலம்
ஈட்டி வைத்திருக்கும்
இறுதிப்படை
இலட்சியத்தில் இருந்து
எள்முனையும் நெகிழாத
உறுதிப்படை
குறிக்கோள் வெல்லக்
குருதியைக் கூடக்
கொட்டிக் கொடுக்கும்
பருதிப்படை

அறுதிப் பெரும்பான்மை
அறிஞர்கள் ஏத்தும்
அறிவுப்படை

அத்தனையும் திரண்டு
அணிவகுத்து நிற்கும்
அலங்காரம் கண்டு
அகங்கார அரசியல்
மிரண்டு
அதிரத்தான் போகிறது!

ஆர்க்கின்ற பெரும் படையா
அச்சத்தைத் தரும் படையாஇது
ஈரோட்டுக் கரும் படையா
இளம்புலியாய் வரும் படையா

அறைகூவல் விடும் படையா
ஆணவத்தைச் சுடும் படையா
கலைஞரின் தமிழ்ப் படையா இது
தளபதியின் தனிப் படையா

உதயநிதி விடும் படையா
உச்சத்தைத் தொடும் படையா
உடன்பிறப்பு எனும் படையா
இல்லை
ஒட்டுமொத்த இனப் படையா!
என்று

காலத் தச்சன்
கணிக்கவே முடியாமல்
கலங்கிப்போய் நிற்கும் அளவுக்கு
கவனம் பெறப்போகிற
கருத்தியல் மாநாடு இது!

கூடுவதற்காக வருகிற
கூட்டத்தின் சேர்க்கையாகவோ
அல்லது செயற்கையாகவோ
அமையப் போகிற
மாநாடு அல்ல இது!
இயற்கையாக நிகழ்கின்ற
மகரந்தச் சேர்க்கை போல
மகிழினிய மக்களின்
மனங்களின் சேர்க்கையில்
மலர்கின்ற மாப்பெரிய
மாநாடு இது!
அன்புப் பிழம்பாக
அமைதியின் அரும்பாக
கட்டிக் கரும்பாக
கருத்தில் இரும்பாக
ஆட்சி நடத்திவரும் நம்
அருமைத் தலைவரின்
ஆகாயம் அளாவிய
மாட்சிக்கான சாட்சியாய்
மையங் கொண்டிருக்கும்
மாநாடு இது!

இளைஞர் உலகத்தின்
எழுச்சி நாயகன்
கலைஞரின் பேரன்
காவிரி நாடன்
தளபதியின் வடிவாகத்
தாவிவரும் தீரன்

இதயநதி குளிர்ந்தோட
இனியமுகம் மலர்ந்தாட
புதியவிதி செயவந்து
புகுந்தாடும் வீரன்
உதயநிதி என்னும்
தமிழர்களின் தோழன்
கட்டிச் சமைத்திருக்கும்
கழக இளைஞரணி
மாநாடு இது!

சித்திரம் போல் சிரித்து
சிட்டுக் குருவி போல் பறந்து
வித்தைகளில் தேர்ந்து
விளையாட்டில் உயர்ந்து
பத்திரமாய் நகர்ந்து
பணிவோடு வளர்ந்து
முத்திரைகள் பதிக்கும்
முதல் அமைச்சாய் சிறந்து
நித்திலமாக
நிமிர்ந்து நிற்கும்
உதயநிதி ஸ்டாலின் அவர்களின்
உன்னதம் மிகுந்த
உழைப்பின் வண்ணமாய்
உருவாகி நடக்கும்
உணர்ச்சிமிகு மாநாடு இது.

ஆற்றும் தொண்டால்
மாற்றார் பலரும்
போற்றும் படியாய்த்
தோற்றம் கொண்ட
தோன்றல், எம் இளையர்
தூய மனத்தர்,
ஈன்றவர் தம்மையும்
ஏந்திய கரங்களில்
இணைந்தவர் தம்மையும்
ஏங்க விடாமல்,
ஏறா நிலைமிசை
ஏறிக் கொண்டிருக்கும்
இளைஞர் உலகத்தின்
ஏந்தல்

உதயநிதி ஸ்டாலின் அவர்களின்
உள்ளத்து வெளிப்பாடுதான்,
தென்னகத்தின் திருப்புமுனையாய்
அமையப் போகும் இந்தச்
சீர்மிகு மாநாடு!

இந்தியாவைப் புதுப்பிக்கும்
இனிய முயற்சியில்
முந்தைய அரசியல்
முதிர்ச்சிகளின் பிம்பமாய்
முந்தி நடந்துவரும்
முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின்
என்னும்
செந்தமிழ்க் கோவேந்தின்
சீரிய பார்வையில்

எங்கள்
சிங்கக் குருளையின்
செம்மாப்பு வெல்லட்டும்!

தங்கத் தளபதியின்
தனயன் திறம் உயரட்டும்!

‘எங்கள் பகைவர்
எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள்
எழுச்சியைக் கண்டே’
என்று தமிழ்ப்பண்கள்
எங்கெங்கும் ஒலிக்கட்டும்!

கரைமீறி வந்து
காண்கின்ற கடலோ இது
கால்கொண்டு நடக்கின்ற
மாமனிதத் திடலோ!
கழகமெனும் உயிருக்கு
இத்தனை இத்தனை உடலோ!
என்று
ஆச்சரியம் பூச்சொரிய
அகிலமே வியக்கட்டும்!
அண்ணா கலைஞரின்
அழியாத ஆன்மாக்கள்
மகிழ்ச்சியில் திளைக்கட்டும்!

ஆடவர் திலகமாய்
ஆளும் தளபதியின்
ஆட்சி எல்லைகள்
அனுமனின் வாலாய் நீளட்டும்!

உதயநிதி ஸ்டாலின் எனும்
ஒப்பற்ற ஆளுமையை
உயரும் இமைகளுடன்
உலகமே நோக்கட்டும்!

முக்காலம் நமதென்று
முரசுகள் முழங்கட்டும்!
எக்காளம் கேட்டு
இமயமே அதிரட்டும்!

உருக்காலை மாவட்டம்
செருக்கோடு நிமிரட்டும்!
உள்ளத்தின் உணர்ச்சிப்
பெருக்கோடு மகிழட்டும்!

---

### கழக இளைஞரணி மாநில மாநாட்டுச் சுடர்

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

### மாநில உரிமை மீட்பு முழக்கங்களை உணர்ச்சி மேலிட எழுப்பி - இளைஞர் அணி அடலேறுகள் உற்சாகம்!

கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாடு சேலம் பெத்தநாயக்கன்பாளையத்தில் இன்று நடைபெறும் நிலையில், மாநாட்டுச் சுடர் தொடர் ஓட்டம், சென்னையிலிருந்து 18.01.2024 (வியாழக் கிழமை) அன்று காலை தொடங்கியது.

சென்னை அண்ணா சாலை - சிம்சன் சந்திப்பில் உள்ள பெரியார் சிலை அருகிலிருந்து மாநாட்டுச் சுடர் ஓட்டத்தை, அமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாநாட்டுச் சுடர் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி வழியாக 316 கிலோ மீட்டர் தூரம் பயணித்து சேலம் மாநாட்டுத் திடலை நேற்று மாலை அடைந்தது.

முன்னதாக இந்த மாநாட்டுச் சுடர் தொடர் ஓட்டத்தில் அந்தந்த மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஆங்காங்கே கழகத்தினர் பெருமளவு திரண்டு நின்று, மாநாட்டுச் சுடருக்கு உற்சாக வரவேற்பளித்தனர்.

நேற்றைய தினம் மாலை, சேலம் - பெத்தநாயக்கன்பாளையம் மாநாட்டுத் திடலில், மாநாட்டுச் சுடரை, எடுத்து வந்த கழக இளைஞர் அணி அடலேறுகள், கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்கள்.



தாம் பெற்றுக் கொண்ட அந்த மாநாட்டுச் சுடரை உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வழங்கி வாழ்த்துப் பெற்றார்.

அப்போது - தலைமைக் கழக முதன்மைச் செயலாளரும் மாநாட்டு ஒருங்கிணைப்பாளருமான கே.என்.நேரு மற்றும் சேலம் மாவட்டச் செயலாளர்கள் உடனிருந்தார்கள்.